# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

************

## ஊடக அறிக்கை

### இலங்கையில் இந்தி தினக் கொண்டாட்டங்கள்

2021 செப்டம்பர் 14ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் இந்தி தினத்தினை முன்னிட்டு இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தது. இலங்கையிலுள்ள இந்தி ஆர்வலர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்குவதனூடாக அவர்களின் இந்திமொழியறிவினையும் திறமைகளையும் வெளிப்படுத்த வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு இந்தியினை மேம்படுத்தும் நோக்குடன் இந்த நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. தற்போது காணப்படும் கொவிட்-19 சவால்களை கருத்தில் கொண்டு இந்நிகழ்வுகள் யாவும் மெய்நிகர் மார்க்கங்கள் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

2. கிட்டத்தட்ட 100க்கும் அதிகமான இந்தி ஆர்வலர்கள், புலமையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட்ட பல்வேறு தரப்பினரும் இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருந்தும் இந்நிகழ்வுகளில் பேரார்வத்துடனும் உற்சாகத்துடனும் பங்குகொண்டிருந்தனர். அத்துடன் வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ் ஜெய்சங்கர் அவர்களினதும் வெளியுறவு மற்றும் கலாசாரத் துறை இணை அமைச்சர் மீனாட்சி லேஹி அவர்களினதும் செய்திகள் இந் நிகழ்வுகளின்போது வெளியிடப்பட்டிருந்தன. அதுமட்டுமல்லாமல் இரத்மலானை பரம தம்ம சைத்திய பிரிவேனாவின் த,லைமை குரு அதி வணக்கத்துக்குரிய கலாநிதி மைதிபே விமலசார மஹா தேரர் தலைமையில், ஏனைய குருமார்கள், பக்தர்கள், ஹிந்தி மொழியை கற்றுவரும் ஏனையோரும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

3.ஹிந்தி மொழியிலான கவிதைகள் பாடல்கள் போன்றவற்றுடன் ஹிந்துஸ்தானி மற்றும் பொலிவூட் இசை ஆகியவற்றின் அடிப்படையிலான நடன மற்றும் இசை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன. இதேபோன்று கண்பார்வையற்ற ஆர்வலர்களுக்காக விசேடமான நிகழ்வொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் காணப்படும் பல்லாயிரம் ஆண்டுகால கலாசார, மொழி, கல்வி மற்றும் மதம் அடிப்படையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக இந்தி மொழியினையும் இலக்கியத்தையும் மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டதாக இந்த நிகழ்வுகள் காணப்பட்டிருந்தன.

4. இந்தி கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நாடளாவிய ரீதியில் மெய்நிகர் மார்க்கம் ஊடாக இந்தி மொழியிலான வீடியோ செய்தி, இந்தியில் கதை சொல்லுதல், இந்தியில் கவிதை வாசித்தல் போன்ற போட்டிகள் 2021 செப்டம்பர் மாதம் முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

************

கொழும்பு
15 செப்டெம்பர் 2021